பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 23 திங்கட்கிழமை 08.08.2022 கதிர் 165

## சீனக் கப்பல் வருகை; இலங்கைக்கு ஆபத்து




சீனாவின் உளவுக் கப்பலை அம்பாந்தோட்டைதுறைமுகத்தில் நங்கூரமிட அனுமதிக்கும்நடவடிக்கைகளுக்கு முன்னணிபௌத்த பிக்கு ஒருவர் கண்டனம் தெரிவித்துள்ளார். 2

# சர்வகட்சி அரசில் கூட்டமைப்பு கட்டாயம் பங்கேற்க வேண்டும்

## இப்படி வலியுறுத்துகின்றார் டலஸ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவிருக்கும் சர்வகட்சி அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியன உள்ளடக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

- இவ்வாறு சுயாதீன அணியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். 2



## பிணையில் வந்த ஜோசப் ஸ்டாலின்




இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு - கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிணைக்கான உத்தரவை இன்று பிறப்பித்துள்ளது.

கொழும்பு, லங்கா வங்கி மாவத்தையில் கடந்த மே மாதம் 28ஆம் திகதி நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தினார் என்ற 2

# ரணில் விரித்துள்ள வலையில் சிக்காதீர்



## தமிழ், முஸ்லிம் எம்.பிக்களை எச்சரிக்கின்றார் பொன்சேகா

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க விரித்துள்ள வலையில் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிக்கக்கூடாது. தமிழ், முஸ்லிம் மக்கள் வழங்கிய ஆணைக்கு அவர்கள் துரோகம் செய்யக்கூடாது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் எமது செய்தியாளரிடம் அவர் 2

## ஜனாதிபதி தலைமையில் இன்று முக்கிய அமைச்சரவைக் கூட்டம்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம், ஜனாதிபதி செயலகத்தில் இன்று மாலை நடைபெறுகின்றது.

முக்கியமான சில அமைச்சரவைப் பத்திரங்களுக்கு இதன்போது அனுமதி வழங்கப்படவுள்ளது. 2

## பொதுநலவாய போட்டிகளுக்குச் சென்ற இலங்கையர்கள் 10 பேர் தலைமறைவு!

பொதுநலவாய போட்டிகளுக்காக இலங்கையில் இருந்து சென்ற விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட 10 பேர் பிரிட்டனில் தலைமறைவாகியுள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

இவர்களில் 9 விளையாட்டு வீரர்களும் அணி நிர்வாகி ஒருவரும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தமது அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் அணியை விட்டு வெளியேறி, அங்கு தலைமறைவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. 2




## பொய் பேசுகிறார் ஜனாதிபதி ரணில்

### சுமந்திரன் 'டுவிட்'



நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைத் தெரிவுக்கான வாக்களிப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள கருத்து பொய்யானது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2

## ரணிலுடனான பேச்சுக்குச் செல்வோம்; சர்வகட்சி அரசில் இணையமாட்டோம்!

### ஜே.வி.பி. திட்டவட்டமாக அறிவிப்பு



சர்வகட்சி அரசில் ஜே.வி.பி.தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இணையாது - என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். 2

## இறக்குமதி தடை நீக்கம்

களைகொல்லியான கிளைபோசெட் மீதான இறக்குமதித் தடை ஓகஸ்ட் 5 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு களைக்கொல்லி இறக்குமதிக்கு தடை 2

## ஹயஸ் மோதி இளைஞர் பலி

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சாவடைந்துள்ளார். அத்துடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி நகர் பகுதியில் இருந்து நுணாவில் நோக்கி ஏ - 9 வீதி ஊடாக சைக்கிளில் 2

## மூன்று புதிய சாதனைகளை படைத்த தென்மராட்சி வீரன்



தேசிய பளு தூக்கல் போட்டியில்

தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டியில் யாழ்ப்பாணம், தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒரே நாளில் மூன்று புதிய சாதனைகளைப் படைத்துள்ளார். 2

## கோட்டா மீண்டும் நாட்டுக்கு வருகை தருவது நல்லதல்ல

### அரசுக்குப் பாதுகாப்புத் தரப்பு அறிவுறுத்து



நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் நிலைமை காரணமாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் நாட்டுக்கு வருகை தருவது பொருத்தமான செயற்பாடாக அமையாது என்று பாதுகாப்புத் தரப்பு அரசுக்கு அறிவித்துள்ளது என்று உள்ளகத் தகவல்களை மேற்கோள் காட்டி சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மூன்று புதிய சாதனைகளை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 6ஆம் திகதி பண்டாரகம பகுதியில் நடைபெற்ற தேசிய பளு தூக்கல் போட்டியில் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 44 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து ஒரே ஒருவராக தென்மராட்சி - சாவகச்சேரியைச் சேர்ந்த சற்குணராசா புசாந்தன் கலந்துகொண்டு மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் மூன்றிலும் வென்று மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

120 கிலோவுக்கு மேற்பட்டோருக் கான பிரிவில் கலந்துகொண்ட இவர், Squat பிரிவில் 330 கிலோகிராமையும், Benchpress பிரிவில் 175 கிலோகிராமையும், Deadlift பிரிவில் 261 கிலோகிராமையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளார். இதில் Squat மற்றும் Deadlift பிரிவில் புதிய சாதனையையும் அவர் நிலைநாட்டியுள்ளார்.

அத்துடன் குறித்த போட்டியில் மொத்தமாக 766 கிலோகிராமைத் தூக்கிப் புதிய சாதனையையும் படைத்துள்ளார்.

JK Fitness இன் பயிற்றுவிப்பு, ஊக்குவிப்பு, வழிகாட்டல் ஊடாக இந்தத் தேசிய சாதனைகளை சற்குணராசா புசாந்தன் நிகழ்த்தியுள்ளார்.

யாழ்., தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் தேசிய ரீதியில் நடைபெற்ற பளு தூக்கல் போட்டியில் தேசிய ரீதியில் மூன்று சாதனைகளைப் படைத்து மூன்று தங்கப் பதக்கங்களை வென்றுள்ளதை அடுத்து பலரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

புசாந்தன் மென்மேலும் சாதனைகளைப் படைத்து யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கும், வடக்கு மாகாணத்துக்கும் பெருமை சேர்ப்பார் என்று JK Fitness இன் பயிற்றுவிப்பாளர் JK நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

முற்று முழுதாக என்னை என் கனவுகளுக்காக அர்ப்பணிக்கப் போகின்றேன். சர்வதேச ரீதியிலான வெற்றிக் கனவை நோக்கி நகரப் போகின்றேன் - என்று JK Fitness இன் பயிற்சியாளரும் தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டியில் மூன்று புதிய சாதனைகளைப் படைத்தவருமான புசாந்தன் தெரிவித்துள்ளார்.

## பொய் பேசுகிறார் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைக் கடந்த வாரம் நேரில் சந்தித்தபோது, அவர்களில் சிலர் தன்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வாக்களித்துள்ளனர் என்று கூறியிருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள சுமந்திரன் எம்.பி., அது பொய்யான கூற்று என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி பொய் பேசுகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வகையில் நாங்கள் ஏகமனதாக டலஸ் அழகப்பெருமவுக்கு வாக்களிக்கத் தீர்மானித்தோம். ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கருத்தை கூட்டத்தில் எந்தக் கட்டத்திலும் ஒருவர் கூட கூறியிருக்கவில்லை - என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## ரணிலுடனான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மைப் பேச்சுக்கு அழைத்துள்ளார். நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் அவரின் அழைப்பை ஏற்று சந்திப்புக்குச் செல்வோம். ஆனால், சர்வகட்சி அரசில் இணையமாட்டோம் என்ற விடயத்தைத் தெளிவாகக் குறிப்பிடுவோம்.

தேர்தலை நடத்தாமல், ஆட்சியைத் தக்கவைக்கவும், தொடரவுமே இந்தச் சர்வகட்சி அரசு முயற்சி இடம்பெறுகின்றது. மாறாக அதில் மக்கள் நலன் இல்லை - என்றார்.

## கோட்டா மீண்டும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முன்னிலை உறுப்பினர் ஒருவர் இவ்வாறான தகவல் கிடைத்துள்ளது என்று குறித்த சிங்கள ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 11ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பதற்கு வீசா அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னதாக அவர் நாட்டுக்கு வருகை தரவேண்டியுள்ள நிலையில் அது குறித்து தான் உறுதியாக அறிந்திருக்கவில்லை என்று குறித்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முன்னிலை உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் உரிய வீசா காலத்துக்கு மேலதிகமாக தங்கியிருப்பது தமது நாட்டுக்குப் பாதுகாப்புப் பிரச்சினையை உருவாக்கும் என்று சிங்கப்பூர் அரசு அறிவித்துள்ளது என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்றும் குறித்த முன்னிலை உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நாட்டில் தற்போதைய நிலைமையின் கீழ் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் நாட்டுக்கு வருகை தருவது பொருத்தமான நடவடிக்கையாக அமையாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி தலைமையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், சர்வகட்சி அரசு சம்பந்தமாகவும் முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

சர்வகட்சி அரசு தொடர்பில், கட்சிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தவுள்ளார்.

## ஹயஸ் மோதி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணித்த இளைஞர்களை அதே திசையில் பின்னால் வந்த ஹயஸ் வாகனம் மோதி விட்டு தப்பித்துச் சென்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் மறவன்புலோ பகுதியைச் சேர்ந்த 26 வயதான க. நிசாந்தன் என்பவர் விபத்தில் சிக்கி பலியானதுடன், அவருடன் பயணித்த மட்டுவில் தெற்கு பகுதியைச் சேர்ந்த 29 வயதான தி.பார்த்தீபன் என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இறக்குமதி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதிக்கப்பட்டபோதும், தேயிலை மற்றும் இறப்பருக்கு கிளைபோசேட் பயன்பாடு மூன்று ஆண்டுகளுக்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டில் மலர் வளர்ப்புத் தொழிலில் நோய் நீக்கம் மற்றும் நோயுற்ற கரும்புச் செடிகள் மற்றும் தென்னை மரங்களின் இலைவாடல் நோயை அகற்றுவதற்காக கட்டுப்பாட்டு அளவில் கிளைபோசெட்டை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டில் 100 சதவிகித இயற்கை விவசாயத்துக்குச் செல்ல அரசு கொள்கை முடிவை எடுத்ததால் 2021ஆம் ஆண்டில் கிளைபோசெட் மீண்டும் தடை செய்யப்பட்டது.

## பொதுநலவாய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் நாடு திரும்பாது பிரிட்டனில் தங்கும் நோக்கத்திலேயே இவ்வாறு தலைமறைவாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இவர்களில் சிலரின் இருப்பிடத்தைப் பொலிஸார் கண்டுபிடித்தாலும், அவர்கள் 6 மாத விசாவிலேயே அங்கு சென்றுள்ளதால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவர்கள் அங்கேயே தங்கியிருக்க எதிர்பார்த்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

பொதுநலவாய போட்டிகளில் இலங்கை சார்பாக போட்டியிட்ட நால்வர் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரணில் விரித்துள்ள .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:-

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைக்குச் சர்வகட்சி வேலைத்திட்டமோ அல்லது சர்வகட்சி அரசோ தீர்வு அல்ல. இது காலத்தை வீணடிக்கும் செயலாகும்.

பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண நிறைய வழிகள் உண்டு. அந்த வழிகளை அரசு நாட வேண்டும். இதைச் செய்ய ரணில் அரசுக்கு இயலாதெனில் ஆட்சியை எதிரணியினராகிய எம்மிடம் கையளிக்க வேண்டும்.

எதிரணியிலுள்ள எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையில் உருவாகும் சர்வகட்சி அரசில் இணையக்கூடாது.

தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சர்வகட்சி அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறத் தயாராகவுள்ளனர் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ள கருத்து மிகவும் ஆழமான விடயம் - என்றார்.

## பிணையில் வந்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இம்மாதம் 3ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் அவர் இருந்தபோது கொழும்பு - கோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவர் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிராக உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல தரப்பினர் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர். அதேவேளை, ஜோசப் ஸ்டாலினின் விடுதலையை வலியுறுத்தி நாடெங்கும் ஆசிரியர் சமூகத்தினர் தொடர் போராட்டங்களையும் முன்னெடுத்து வந்திருந்தனர்.

## சீனக் கப்பல் வருகை: .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பலை நிறுத்த அனுமதிப்பது இலங்கையின் தேசிய மற்றும் மூலோபாய நலன்களுக்குப் பாதகமானது என்று அமரபுர மகா சங்க சபையின் தலைவரான வஸ்கடுவ மஹிந்தவங்ச மகாநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில் கப்பலின் வருகை அவசியமற்றது என்றும், இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையைப் பொறுத்தவரை, எரிபொருள், எரிவாயு போன்ற அத்தியாவசிய தேவைகளுக்காக இந்தியாவையும், சர்வதேச நாணய நிதியத்தையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில் சீனாவின் உளவுக் கப்பல் வருவது என்பது அவசியமற்றது. அத்துடன் இது பிரச்சினைகளைத் தீவிரமாக்கும் செயற்பாடு ஆகும்.

இலங்கை தனது சொந்த மக்களுக்கே எரிபொருளை விநியோகிக்க முடியாத நிலையில் சீனாவின் கப்பல் எரிபொருள் நிரப்புவதற்காக இலங்கைக்கு வருகின்றது என முரண்பாடான தகவலும் வெளியாகியுள்ளது - என்றார்.

## சர்வகட்சி அரசில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணிலுடன் கடந்த வாரம் நடைபெற்ற சந்திப்பின்போது தான் இதனை வலியுறுத்தியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. அதேபோன்று மக்கள் விடுதலை முன்னணியும் முக்கியமான கட்சியாகும். எனவே, இந்த இரண்டு கட்சிகளும் நிச்சயமாக சர்வகட்சி அரசில் இடம்பெற வேண்டும் என்பதை நான் மிக முக்கிய காரணியாக ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினேன். இந்த இரண்டு கட்சிகளும் நிச்சயமாக சர்வகட்சி அரசைப் பிரதிநிதித்துவம் செய்வது அத்தியாவசியம் என்பதே எனது நிலைப்பாடாக இருக்கின்றது - என்று டலஸ் அழகப்பெரும எம்.பி. மேலும் கூறியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாளை என்ன நடக்கும்?

**நாளை 9ஆம் திகதி. மே, ஜூன், ஜூலை மாதங்களில் 9 ஆம் திகதிகளில் பல அரசியல் மாற்றங்களை சந்தித்த இலங்கை மக்கள், நாளை ஒகஸ்ட் 9 ஆம் திகதியும் அப்படி ஏதும் நேருமோ என்று அங்கலாய்ப்பதில் அர்த்தம் இல்லாமல் இல்லை.**

**மே 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியைத் துறக்க வேண்டியதாயிற்று. ஜூன் 9ஆம் திகதி பஸில் ராஜபக்ஷ எம்.பி. பதவியைத் துறந்தார். ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி பதவியை விடுத்து கோட்டாபய ராஜபக்ஷ ஓட்டம் பிடிக்க வேண்டியவரானார்.**

**ஆனால் அவையெல்லாம் ராஜபக்ஷக்களுக்கு எதிராகக் கட்டவிழ்ந்தவை.**

**இப்போது அதிகாரத்தில் இருப்பவர் ராஜபக்ஷக்களின் ஆதரவு பெற்ற ஜனாதிபதிதான். ஆனால், அவர் ராஜபக்ஷ அல்லர். ரணில் விக்கிரமசிங்க.**

**எனினும், நாளை ஜனாதிபதி ரணிலுக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு தொழிற்சங்கக் கூட்டமைப்புகள், ஜே.வி.பி. போன்ற தரப்புகள் தீவிரமான முன்முயற்சிகளை எடுத்துள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாளை 'மக்கள் கட்டளை' பிறப்பிக்கப்படும் என்று தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பிரதிநிதியும் ஜே.வி.பி. மத்திய குழு உறுப்பினருமான வசந்த சமரசிங்க கூளுரைத்திருக்கின்றார்.**

**இதற்கிடையில், 9ஆம் திகதியன்று மக்கள் சுனாமி போல ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக வீதிக்கு இறங்குவார்கள் என்று அளந்திருக்கிறார் முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய எம்.பியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.**

**ஆனால் இப்படி அவர் திடீரென ரணிலுக்கு எதிரான போராட்டக் களத்துக்குள் அதிரடியாக நுழைந்திருக்கின்றமை இந்த எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் 'அறகல்ய'காரர்களை எரிச்சலுக்கு உள்ளாக்கி இருக்கின்றது. தங்களது போராட்டத்துக்குள் இடையில் புகுந்து அதனை 'ஹைஜாக்' பண்ண சரத் பொன்சேகா முயற்சிக்கின்றார் என்ற கருத்து நிலை அறகல்யகாரர்களுக்கு ஏற்பட்டிருப்பதாக ஒரு விமர்சகர் சுட்டிக் காட்டுகின்றார்.**

**அரச தரப்புக்கு எதிராகக் கடந்த ஆறு மாதங்களாக வெளிப்பட்டிருக்கும் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் மற்றும் எழுச்சிகளுக்குக் காரணமான விடயங்களைத் தேடிக் கண்டுபிடித்து அந்த விடயங்களில் மக்களின் அதிருப்திகளை – சீற்றங்களை – எரிச்சலை – குறைக்கும் வழி வகைகளை புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகின்றார்.**

**அதேசமயம், மக்களின் அமைதிப் போராட்டத்தை வன்முறை வழிக்குத் திருப்பி, அதன் மூலம் அரசையோ, ஆட்சியாளர்களையோ அச்சுறுத்தி அடக்கலாம், துரத்தலாம் என்ற நினைப்பை இரும்புக் கரம் கொண்டு நசுக்குவதிலும் ஜனாதிபதி ரணிலின் அரசு கணிசமான முன்னேற்றம் கண்டு வந்திருக்கின்றது.**

**இவை இரண்டும் நாளைய போராட்டத்துக்கான எழுச்சியை தண்ணீர் ஊற்றி அணைத்து விடும் அல்லது தளரச் செய்துவிடும் பிரதான நடவடிக்கைகளாக அமைந்துள்ளன.**

**ஏற்கனவே, நரித் தந்திரசாலியான ரணிலின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் அறகல்ய போராட்டக்காரர்கள் வெகுஜன எழுச்சியிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு விட்டார்கள் என்பது கண்கூடு.**

**அந்தப் பின்புலத்தில் நாளை 9ஆம் திகதி பெரும் அரசியல் மாற்றங்கள், அதிரடி நிகழ்வுகள் இடம் பெறக்கூடிய அளவுக்கு போராட்டம் விஸ்வரூபம் எடுக்கும் என்று நம்புவது துர்லபமே.**

# தனியார் மயப்படுத்தப்படும் 40 அரச நிறுவனங்கள்!

## சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை

இலங்கையின் சுமார் 40 அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பை நடத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

சர்வதேச நாணய நிதியத்துடன் நிதியுதவி தொடர்பாகப் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது.

இதன்போதே சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் 40 அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்த வேண்டும் என்று கேட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற விடயங்களுக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்காமலேயே எதிர்க்கட்சி என்ற வகையில், நாடாளுமன்றில் அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்க முடியும். – எனக் கூறியள்ளார்.

# தேர்தல் வரை மக்களின் நம்பிக்கையை வெல்லக்கூடிய இடைக்கால சர்வகட்சி அரசு ஸ்தாபிக்கப்படவேண்டும்

## சரித ஹேரத் கூறுகிறார்

நாடாளுமன்றத்தின் ஊடாக அரசமைப்பின் பிரகாரம் புதிய ஜனாதிபதித் தெரிவு இடம்பெற்றிருந்தாலும், அதனை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளாவிடின் சமூகக் கட்டமைப்பில் ஒருபோதும் அமைதி நிலவாது.

தேர்தல் ஒன்று இடம்பெறும் வரை மக்களின் நம்பிக்கையை வெல்லக் கூடிய வகையில் இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்துள்ளதை எவராலும் மறுக்க முடியாது. தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் 69 லட்சம் மக்களாணையுடன் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அரசமைப்பிற்கு அப்பாற்பட்ட வகையில் பதவி விலகினார்.

முன்னாள் ஜனாதிபதியின் இரண்டரை வருட பதவிக் காலத்தில் நான்கு அமைச்சரவை ஸ்தாபிக்கப்பட்டதுடன், பிரதமர் நியமனம் இருமுறை இடம்பெற்றது. மக்களின் போராட்டம் வரலாற்று ரீதியில் அரசியல் கட்டமைப்பை முழுமையாக மாற்றியமைத்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் ஊடாக புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும், அதனை மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இலங்கை அரசியல் வரலாற்றில் அரசமைப்பிற்கு அமைய ஒரு சில விடயங்கள் இடம்பெற்றிருந்தாலும் அதுவே பிற்பட்ட காலத்தில் சமூக மட்டத்தில் பாரிய விளைவுகள் ஏற்பட ஒரு காரணியாக அமைந்தது.

அரசமைப்பிற்கு அமைய எந்தத் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டு அதனை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளாவிடின் சமூக மட்டத்தில் அமைதி நிலவாது.

தேர்தல் ஒன்று இடம்பெறும் வரை ஸ்தாபிக்கப்படும் இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் நாட்டு மக்களின் நம்பிக்கையை முழுமையாக வெல்லும் வகையில் செயற்பட வேண்டும். – என்றார்.

# கொழும்பு - திருகோணமலை தபால் ரயில் சேவை ஆரம்பம்

## முதல் நாளே ஒருவர் பாய்ந்து தற்கொலை



கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கும் திருகோணமலைக்குமான தபால் ரயில் சேவை நீண்ட நாள்களுக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இரவு 9.30 மணிக்கு கொழும்பில் இருந்தும், இரவு 7.00 மணிக்கு திருகோணமலையிலிருந்தும் இச்சேவை புறப்படுகின்றது.

முதல் வகுப்பு குளிரூட்டப்பட்ட, இரண்டாம் வகுப்பு மற்றும் மூன்றாம் வகுப்பு இருக்கை முன்பதிவு வசதியுடன், இரவு தபால் ரயில் சேவை இடம்பெறும் எனத் திருகோணமலை ரயில் நிலைய அதிபர் தெரிவித்தார்.

இதற்கிடையில் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி வந்த முதலாவது ரயில் சேவையில் ரயிலில் மோதி நபரொருவர் உயிரிழந்துள்ளார் என சீனக்குடா பொலிஸார் தெரிவித்துள்ளனர். நீண்ட நாள்களுக்கு பிறகு நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்த தபால் ரயில் நேற்றுக் காலை திருகோணமலை நோக்கி வந்த போது சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீவரகம பகுதியில் நபர் ரயில் மோதுண்டார் என ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் திருகோணமலை – தீவரகம ரொட்டரி நிவாஸ பகுதியைச் சேர்ந்த பந்துல பீரிஸ் (49 வயது) என்பவர் கணவன் – மனைவிக்கு இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் ரயிலின் முன் பாய்ந்தார் என உயிரிழந்தவரின் மனைவி பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மரணம் தொடர்பான விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# காசா மீது இஸ்ரேல் தாக்குதல்
# தீவிரவாத அமைப்பின் தளபதி சாவு



இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. பலஸ்தீனத்தின் மேற்குகரை, காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது. காசா பகுதியில் பலஸ்தீன நாட்டின் இஸ்லாமிக் ஜிகாத் (ஐ.ஜே.) என்ற தீவிரவாத அமைப்பு செயல்பட்டு வருகிறது. ஈரான் ஆதரவுடன் செயல்படும் ஐ.ஜே., ஹமாஸ் தீவிரவாத அமைப்புடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

காசாவில்ஐ.ஜே.அமைப்பினரை குறிவைத்து இஸ்ரேல் ராணுவம் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய தாக்குதலில், அதன் ஆயுதக்குழு பிரிவான அல்-குவாட்ஸ் பிரிகேடிஸ் தளபதி அல் ஜாபரி கொல்லப்பட்டார். இதற்கு பதிலடியாக ஐ.ஜே. அமைப்பினர் இஸ்ரேல் மீது வான்வழி தாக்குதல் நடத்தினர். இதில் 2ம் கட்ட உயர் தளபதி காலித் மன்சூர் உயிரிழந்தார்.

இதையடுத்து, இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் போர்ப் பதற்றம் நீடித்து வருகிறது. இந்த தாக்குதலில் குழந்தைகள் உட்பட 24 பொதுமக்களும் பலியாகி உள்ளனர். காசாவில் பல குடியிருப்பு கட்டடங்கள் ஏவுகணை வீச்சில் தரை மட்டமாகி மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

## உக்ரைன் நாட்டு துறைமுகங்களில் இருந்து 4 தானியக் கப்பல்கள் லெபனானுக்கு செல்கின்றன



ஷியா-உக்ரைன் ஒப்பந்தத்தின் கீழ் உக்ரைன் துறைமுகங்களில் இருந்து மேலும் 4 தானியக் கப்பல்கள் இன்று லெபனானுக்கு செல்கின்றன. ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக உலகில் 4.7 கோடி பேர் பசியால் வாடும் அபாயம் இருப்பதாக ஐ.நா. சபை எச்சரித்தது. இதையடுத்து உக்ரைனில் இருந்து தானியக் கப்பல்களை கருங்கடல் வழியாக வெளிநாடுகளுக்கு அனுப்ப வழிவகை செய்யும் ஒப்பந்தம் ரஷ்யா-உக்ரைன் இடையே ஐ.நா. சபை மற்றும் துருக்கி முன்னிலையில் கடந்த மாதம் கையெழுத்தானது.

அதன் கீழ் உக்ரைனில் இருந்து முதல்முறையாக உணவு தானியக் கப்பல் லெபனானை நோக்கி கடந்த 1ம் திகதி புறப்பட்டது. இந்த நிலையில் மேலும் 4 கப்பல்கள் உக்ரைன் துறைமுகங்களில் இருந்து இன்று லெபனானுக்கு செல்கின்றன. இதன் மூலம் பசியால் வாடும் 4.7 கோடி பேரின் துயரை துடைக்கும் முயற்சியில் உக்ரைன் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என தெரிவித்தனர்.

## 'மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ.' பட்டம் வென்றார் ஆர்யா



அமெரிக்காவில் நடந்த மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ அழகி போட்டியில் வெர்ஜினியா இளம்பெண் ஆர்யா வால்வேக்கர் (18) பட்டம் வென்றார். அமெரிக்காவின் நியுஜெர்சி நகரில் மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ 2022 போட்டி நடந்தது. இதில் வெர்ஜீனியாவைச் சேர்ந்த ஆர்யா வால்வேக்கர் மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ. பட்டத்தை வென்றார். வெர்ஜினியா பல்கலைக்கழக மருத்துவ மாணவி சவும்யா சர்மா 2ம் இடத்தையும், நியூஜெர்சியை சேர்ந்த சஞ்சனா செக்கூரி 3ம் இடத்தையும் பிடித்தனர். அழகி பட்டம் வென்ற ஆர்யா கூறுகையில், "திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் நடிக்க வேண்டும் என்பதும் எனது சிறுவயது கனவு.

மேலும் புதிய இடங்களைத்தேடிப் பயணம் செல்வது, சமைப்பது மற்றும் விவாத நிகழ்ச்சிகளில் பங்கேற்பது போன்ற பொழுதுபோக்குகள் ஆகும்" என்று கூறினார். மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ., மிஸஸ் இந்தியா யு.எஸ்.ஏ மற்றும் மிஸ் டீன் இந்தியா யு.எஸ்.ஏ ஆகிய மூன்று வெவ்வேறு போட்டிகளில் 30 மாகாணங்களைச் சேர்ந்த 74 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். மூன்று பிரிவுகளிலும் வெற்றி பெறுபவர்கள் அடுத்த ஆண்டு மும்பையில் நடைபெற உள்ள சர்வதேச அளவிலான அழகிப் போட்டிக்கு அனுப்பப்படுவார்கள். நிகழ்ச்சியில் பாடகி ஷிபானி காஷ்யப், குஷி படேல் (மிஸ் இந்தியா 2022) மற்றும் ஸ்வாதி விமல் (மிஸஸ் இந்தியா வேர்ல்டுவைட்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 900 ஆண்டுகள் பழமையான மரப்பாலம் எரிந்து நாசம்



சீனாவின் கிழக்கே புஜியான் மாகாணத்தில் பிங்னன் கவுண்டி பகுதியில் 960ம் ஆண்டு முதல் 1127ம் ஆண்டு வரை சாங் வம்சம் ஆட்சி செய்தது. அந்த காலகட்டத்தில் மரத்தில் உருவான நீண்ட மரப்பாலம் ஒன்று எழுப்பப்பட்டது. இது 98.3 மீற்றர் நீளம் கொண்டது. இந்த மரப்பாலம் திடீரென்று தீப்பிடித்து எரியத் தொடங்கியது. இதுபற்றி தகவல் அறிந்தது தீயணைப்பு படையினர் விரைந்துசென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணிநேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தீப்பிடித்து எரியத் தொடங்கியதும் முதல் 20 நிமிடத்திலேயே மரப்பாலம் எரிந்து கீழே விழத் தொடங்கியது. நீண்ட வளைவுகளை கொண்ட இந்த பாலம் இயற்கை பேரிடர் காரணமாக எரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது. இது குறித்து சீன நிபுணர்கள் கூறியதாவது:-

இந்த பாலத்துக்கு மர்ம மனிதர்கள் யாராவது தீ வைத்திருக்க வேண்டும். தண்ணீரின் மேல் இந்தப் பாலம் அமைந்துள்ளது. எனவே தொடர்ச்சியாக தீப்பிடித்து எரிய வாய்ப்பு இல்லை. யாரோ தீவைத்ததால் தான் பாலம் எரிந்துள்ளது. வனான் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த பாலம் உலகின் அமைதிக்கான பாலம் என்றும் அழைக்கப்படுகிறது. பொதுவாக பாலங்கள் கற்களால் கட்டப்படும். கலாச்சார முக்கியத்துவம் கொண்ட இந்த பாலத்தை மரத்தின் மூலம் தொழில் நுட்பத்துடன் வடிவமைத்திருந்தனர். வளைவுகளுடன் கூடிய 98.3 மீற்றர் நீளம் கொண்ட பாலத்தை அமைப்பது மிகவும் கடினம். ஆற்றின் மீது கலைநுட்பத்துடன் மரத்தில் சீனர்களின் உள்ளார்ந்த அறிவை நிரூபிக்கும் வகையில் கட்டப்பட்ட பாலத்தை நாம் இழந்துள்ளோம். இவ்வாறு சீன நிபுணர்கள் தெரிவித்தனர்.




## இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்த பாகிஸ்தான் போர்க் கப்பல் விரட்டி அடிப்பு

பாகிஸ்தான் கடற்படையின் போர்க்கப்பல் ஆலம்கிர், நேற்று குஜராத் கடல் பகுதியில் உள்ள இரு நாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லை கோடு பகுதியை கடந்து இந்திய கடற்பகுதிக்குள் நுழைந்தது. உடனடியாக இதை அறிந்த இந்திய கடற்படையினர், இந்திய கடலோர காவல்படையின் டோர்னியர் விமான கப்டனுக்கு தகவல் அளித்தனர்.

இதையடுத்து அந்த பகுதிக்கு விரைந்த இந்திய கண்காணிப்பு விமானம், பாகிஸ்தான் போர்க் கப்பலின் இருப்பிடம் குறித்து எச்சரிக்கை விடுத்ததுடன் அதன் பகுதிக்குத் திரும்பும்படி வலியுறுத்தியது. டோர்னியர், ஆலம்கிர் மீது வட்டமிட்டுக் கொண்டே இருந்ததாகவும், கடலோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் போர்க் கப்பல் அத்துமீறியதன் நோக்கத்தை அறிய வானொலி மூலம் இந்திய தரப்பினர் பாகிஸ்தான் கப்பல் கப்டனுடன் தொடர்பு கொண்ட நிலையில் அவர் அதற்கு பதில் அளிக்கவில்லை. இதையடுத்து டோர்னியர் விமானம் மூன்று முறை பாகிஸ்தான் போர்க்கப்பலுக்கு முன்னால் பறந்து எச்சரித்தது.

இதையடுத்து பின்வாங்கிய ஆலம்கீர், பாகிஸ்தான் பகுதிக்கு திரும்பியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# விவசாயத் துறையில் இந்தியா தன்னிறைவு அடைந்து முன்னணி நாடாக மாற வேண்டுமென மோடி உரை



டெல்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையின் கலாச்சார மையத்தில் நிதி ஆயோக்கின் ஏழாவது நிர்வாகக்குழுக் கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் விவசாய பொருள்கள் உற்பத்தியில் தன்னிறைவடைதல், தேசிய கல்விக் கொள்கை, நகர்ப்புற நிர்வாகம் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. 23 மாநில முதலமைச்சர்கள், 3 துணைநிலை ஆளுநர்கள், அலுவல் சார்ந்த உறுப்பினர்கள், நிதி ஆயோக்கின் துணைத்தலைவர், முழுநேர உறுப்பினர்கள், மத்திய மந்திரிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் மோடி, கொரோனாத் தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமும் அதன் வலிமைக்கு ஏற்ப முக்கிய பங்காற்றியது.

இந்த கூட்டு நடவடிக்கை வளரும் நாடுகளுக்கு இந்தியா ஒரு முன்னுதாரணமாக திகழ்வதற்கு வழி வகுத்தது. ஜி.எஸ்.டி. வசூலை அதிகரிக்க மத்திய, மாநில அரசுகளின் கூட்டு நடவடிக்கை தேவை. நமது பொருளாதார நிலையை வலுப்படுத்தவும், 5 டிரில்லியன் டொலர் பொருளாதாரமாக மாறவும் இது முக்கியமானது.

அத்தோடு, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத் துறையை நவீனமயமாக்க வேண்டும். அதன் மூலம் விவசாயத் துறையில் இந்தியா தன்னிறைவு அடைய முடியும், உலக அளவில் முன்னணியில் இருக்க முடியும், என்று தெரிவித்திருக்கிறார்.

எளிதான வாழ்க்கை, வெளிப்படையான சேவை வழங்குதல் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஆகியவற்றை உறுதிசெய்வதற்கு, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். இதன்மூலம் விரைவான நகரமயமாக்கல் என்பது பலவீனத்திற்குப் பதிலாக இந்தியாவின் பலமாக மாறும். சமையல் எண்ணெய் உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைய வேண்டும், என்றும் பிரதமர் மோடி குறிப்பிட்டிருக்கிறார்.

## துணை ஜனாதிபதித் தேர்தலில் மம்தாவின் உத்தரவை மீறி வாக்களித்த இரு எம்.பிக்களை தகுதி நீக்கம் செய்ய முடிவு

இந்தியத் துணை ஜனாதிபதித் தேர்தலில் இந்திய நாடாளுமன்ற எம்.பிக்கள் மேல்சபை மற்றும் நியமன எம்.பிக்கள் ஆகியோர் வாக்களித்திருந்தனர். மொத்தம் 725 எம்.பிக்கள் வாக்களித்த இந்தத் தேர்தலில் 528 வாக்குகள் பெற்று பாரதிய ஜனதா வேட்பாளர் ஜெகதீப் தன்வர் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட மார்க்ரெட் அல்வா 182 வாக்குகளை மட்டுமே பெற்று தோல்வி அடைந்தார். இரு பாரதிய ஜனதாவைச் சேர்ந்தவர்கள் உள்பட 55 எம்.பிக்கள் வாக்களிப்பில் பங்கேற்றிருக்கவில்லை.



துணை ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கப் போகிறோம் என மேற்கு வங்காள முதலமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி அறிவித்திருந்த நிலையில், அவரது கட்சியைச் சேர்ந்த எம்.பிக்களான சிசிர் குமார் அதிகாரி மற்றும் சுவேந்து அதிகாரி ஆகிய இருவரும் கட்சி முடிவினை மீறி வாக்களித்துள்ளனர்.

இது அக்கட்சியினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க திரிணாமுல் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. அவர்களிருவரையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என நாடாளுமன்ற சபாநாயகருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற தலைவர் சுதீப்பாண்டோபதி தெரிவித்துள்ளார்.

துணை ஜனாதிபதித் தேர்தலில் எங்கள் கட்சி எம்.பிக்கள் கலந்துகொள்ளமாட்டார்கள் என தெரிவித்து இருந்தோம். ஆனால், அதை மீறி சிசிர் குமார் அதிகாரியும், திப்யேந்து அதிகாரியும் வாக்களித்து உள்ளனர்.

அவர்கள் இப்போது எந்தப் பக்கம் உள்ளார்கள் என்பது இதில் இருந்து தெரிகிறது. அவர்களுக்கான நடவடிக்கையை கட்சி தீர்மானிக்கும். கட்சி கட்டுப்பாட்டை மீறி அவர்கள் வாக்களித்துள்ளதால் இருவரையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என நாடாளுமன்ற சபாநாயகருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது, என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## சுவாசிக்க முடியாமல் திணறி வரும் ஜனநாயகம்

### சிதம்பரம் கடும் விமர்சனம்

அனைத்துத் துறைகளும் அடக்கி வைக்கப்பட்டிருப்பதால் ஜனநாயகம் சுவாசிக்க முடியாமல் திணறி வருவதாக ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.



ராமர் கோயில் அடிக்கல் தின ஆண்டு விழாவை எதிர்க்கும் நோக்கிலேயே கடந்த வெள்ளிக்கிழமை காங்கிரஸ் நாடுதழுவிய அளவில் போராட்டத்தை நடத்தியதாக தெரிவித்துள்ள உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் கருத்தை ஏற்க முடியாது என்றும் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். டெல்லியில் அனைத்து எம்.பிக்களும் இருக்கும் தினத்தை தேர்வு செய்தே போராட்டம் நடத்தப்பட்டதாகவும், இதற்கும் ராமர் கோயில் அடிக்கல் தின விழாவுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் அவர் கூறினார்.

தற்போது நடைபெற்று வரும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில், பணவீக்கம் மற்றும் வரி உயர்வு குறித்து விவாதம் நடத்தக்கோரி எதிர்க்கட்சியினர் தொடர் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், கூட்டத்தொடர் பலமுறை ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் நாடாளுமன்றம் செயலிழந்து விட்டதாகவும் ஏறக்குறைய அனைத்து துறைகளும் அடக்கி வைக்கப்பட்டிருப்பதால் ஜனநாயகம் சுவாசிக்க முடியாமல் திணறி வருவதாகவும் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

# றொக்கெட் திட்டம் தோல்வியில் இஸ்ரோ அதிகாரப்பூர்வ அறிவிப்பு


புவி கண்காணிப்புச் செயற்கைக்கோள் உள்ளிட்ட இரு செயற்கைக் கோளுடன், இஸ்ரோவின் சிறிய ரக ரொக்கெட்டான எஸ்.எஸ்.எல்.வி. டி-1 நேற்றுக் காலை 9.18 அளவில் விண்ணில் ஏவப்பட்டது.

இந்த செயற்கைக்கோள்களில் இருந்து சமிக்ஞைகள் தமக்கு வரவில்லை என்றும், விண்ணில் ஏவப்பட்டதிலிருந்து முதல், இரண்டாவது, மூன்றாவது நிலைகளை ரொக்கெட் வெற்றிகரமாக கடந்ததாகவும் ஆனால், இறுதிக் கட்டத்தில் செயற்கைகோள்களில் இருந்து சமிக்ஞை கிடைக்கப்பெறவில்லை என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

செயற்கைக்கோள்களையும் ரொக்கெட்டையும் மீண்டும் தொடர்புகொள்ளும் முயற்சிகளும், சமிக்ஞைகளை மீண்டும் உறுதி செய்யும் முயற்சிகளும் நடைபெற்று வந்த நிலையில் எஸ்.எஸ்.எல்.வி டி1 சிறிய ரக ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்ட இரு செயற்கைக்கோள்களும் செயலிழந்துவிட்டன என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

எஸ்.எஸ்.எல்.வி டி1 ரொக்கெட்டில் ஏவிய இ.ஓ.எஸ்.-02, ஆசாதி சாட் ஆகிய செயற்கைக் கோள்களை விண்ணில், சுற்றுவட்ட பாதையில் நிலைநிறுத்த முடியவில்லை என்றும் இதனால் இந்த இரு செயற்கைக்கோள்களையும் பயன்படுத்த இயலாது என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

உணரிகளுடைய செயலிழப்பால் ரொக்கெட்டிலிருந்து முன்னரே செயற்கைக்கோள்கள் வெளியேறியதால் அவற்றினை உரிய முறையில் நிலைநிறுத்த முடியவில்லை என்றும் செயற்கைக் கோள்கள் வட்டப்பாதைக்குப் பதிலாக நீள் வட்டப்பாதையில் நிறுத்தப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருமலைத் திருமங்களாய் ஆலயத்தையும் தொல்பொருள் பிரிவு ஆக்கிரமிக்க முயற்சி

## செல்வராசா கஜேந்திரன் எம்.பி. நேரில் ஆராய்வு






ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான பழமைவாய்ந்த, தொன்மையான திருகோணமலை சேருவில் திருமங்களாய் ஆலயத்திற்குச் சென்று அப்பகுதி மக்களைச் சந்தித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தொல்பொருள்திணைக்களம் மற்றும் அரச இயந்திரத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக மக்களுடன் கலந்துரையாடினார்.

இப்பகுதிகளில் தமிழர்கள் செறிவாக வாழ்ந்த போதும், 1964க்குப் பின்னர் சிங்கள அரசின் திட்டமிட்ட சிங்கள பௌத்த குடியேற்றங்களாலும், தமிழருக்கெதிரான வன்முறைகளாலும் அப்பகுதியிலிருந்து தமிழர்கள் வெளியேறிய நிலையில் தற்போது அது அடர்ந்த வனப்பகுதியாக காட்சியளிக்கின்றது.

இப்பகுதிகளில் அண்மைய ஆய்வுகளின் போது 05 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் 03 கல்வெட்டுக்கள் 10 –11 நூற்றாண்டுக்குரியதெனவும், 02கல்வெட்டுக்கள்14ஆம்நூற்றாண்டுக்குரியதெனவும் கருதப்படுகின்றது.

இந்தக் கோவிலை ஆக்கிரமிப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் முயற்சிகளை எடுத்துள்ளது.

சிறிலங்கா பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ண, கடும்போக்கு பௌத்த சிங்கள இனவாதியான ஞானசார தேரர் போன்றவர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட தொல்பொருள் செயலணி மூலம் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பல தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, அவை பௌத்த, சிங்கள சின்னங்களாக மாற்றும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பது தெரிந்ததே.

# நில ஆக்கிரமிப்பின் மறுவடிவமே திராய்க்கேணிப் படுகொலைகள்

## காரைதீவு தவிசாளர் ஜெயசிறில் காட்டம்

(காரைதீவு நிருபர் சகா)

அம்பாறை மாவட்ட தமிழர்களின் அடையாளத்தை இல்லாதொழிக்கவேண்டும் என்பதற்காக 1983 களிலிருந்து தொடர்ச்சியாக திட்டமிட்டு பல படுகொலைகளைச் செய்துள்ளார்கள். உண்மையில் அது நில ஆக்கிரமிப்பின் மறுவடிவமே. அந்த வகையில் குரூரமாக ஈவிரக்கமின்றி மேற்கொள்ளப்பட்ட திராய்க்கேணி படுகொலைக்கு இன்று 32 வருடங்களாகின்றன.

– இவ்வாறு திராய்க்கேணி படுகொலையின் 32 ஆவது வருட நினைவேந்தலின் போது உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார் .

அவர் அங்கு மேலும் கூறுகையில் –

1990களில் ராணுவம் சில முஸ்லிம் இளைஞர்களின் உதவியோடு இங்கு செய்த இந்தக் குரூர கொலையானது, பரம்பரை பரம்பரையாக தமிழ் மக்களின் மனங்களிலே நினைவு கூரப்படும் .

இந்தப் பாமர மக்களை கொலை செய்தவர்களையும், எமது இனத்தின் மீது பாரிய அநியாயங்களை செய்தவர்களையும் நாங்கள் மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம்.

நாம் எந்த ஒரு இனத்திற்கோ சாதிக்கோ அநியாயம் செய்ய மாட்டோம். நாங்கள் அவர்களுக்கு எதிரானவர்களும் அல்லர். ஆனால் எமது நிலங்களை சூறையாட வருபவர்களுக்கு எதிராக நாங்கள் தொடர்ச்சியாக போராடுவோம்.

முஸ்லிம் மக்கள் அனைவரும் இதில் சம்பந்தப்பட்டார்கள் என்று கூறவில்லை. ஆனால் ஒரு சில முஸ்லிம் இனவாதிகள் முன்னணியில் இருந்து செய்யப்பட்டமையை நேரடியாகக் கண்ணால் கண்ட திராய்க்கேணி மக்கள் இங்கு பேசுகையில் கூறுகின்றனர்.

ஆறு நாள் குழந்தையைக் கூட ஆலமரத்தில் அடித்து ஈவிரக்கமின்றிக் கொன்றிருக்கின்றார்கள்.

இதுபோல் வீரமுனை, உடும்பன் குளம், நாவிதன்வெளி நீலாவண, காரைதீவு, பாண்டிருப்பு போன்ற பல இடங்கள் இவர்களின் கைவரிசைக்கு இலக்காகி இருக்கின்றன.

அவர்களால் செய்த அழிப்பு ஒரு நாள். ஆனால் அது காலகாலமாக மக்கள் நினைவில் வைத்திருப்பார்கள்.

தமிழ் மக்களின் அடையாளமே அழிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் இலக்கு.

இன்னும் இந்த கொலைகளுக்கு நீதி கிடைக்கவில்லை. ஒரு ஆறுதலுக்காவது ஒரு வழக்குத்தானும் போடப்படவில்லை. இந்த நிலையில் இங்கு இந்த மக்கள் ஐம்பது வீதமாக குறைந்து வாழ்க்கையை கடத்திக் கொண்டிருக்கின்றார்கள் .

இன்னும் நீங்கள் குறையக் கூடாது என்பதற்காகவே இத்தகைய நிகழ்ச்சிகளை நடாத்துகின்றோம். இந்த வரலாறு இளம் சந்ததியினருக்கு எழுதி வைக்கப்பட வேண்டும் என்பதையும், இனத்தின் மீது கை வைப்போரை மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம் என்பதையும் தெளிவுபடுத்துவது இந்த நிகழ்ச்சியின் நோக்கம். – என்றார்.



# கிழக்கு பல்கலைக்கழகத்தில் இந்துக் கலைக்கூடம் திறப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீட இந்து நாகரிகத்துறையில் இந்துக்கலைக்கூடமும், அருங்காட்சியகமும் திறப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் தலைமையில், இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி வ.குணபாலசிங்கம் துணைத் தலைமையில், யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் மா.செல்வராசா, பேராசிரியர் சி.மௌனகுரு முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் திபின்.பீ.ஆர், விசேட அதிதியாக மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் க.கருணாகரன், சிறப்பு அதிதியாக கலை, கலாசார பீட பீடாதிபதி பேராசிரியர் ஜீ.கென்னடி உள்ளிட்ட அதிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.




# வெளிநாட்டு சிறுவர்களுக்கு தனியான சிகிச்சை விடுதிவசதி நாட்டில் டொலர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுவே வழி!

## லேடி ரிட்ஜ்வே வைத்திய நிபுணரின் ஆலோசனை இது

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்காக டொலர்களை கண்டுபிடிக்கும் யோசனை யொன்றை கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தி யசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி தீபால் பெரேரா அரசாங்கத்திடம் முன்வைத் துள்ளார் என சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய் தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

வெளிநாட்டில் உள்ள சிறுவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தி யசாலையில் தனியான விடுதியொன்றை உருவாக்குவதே டொலரைக் கண்டுபிடிப்பதற்கான சிறந்த வழியாகும் என நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக கட்டுநாயக்க விமான நிலையத்தை சூழவுள்ள பிரதேசத்தில் வெளிநாட்டில் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்ப தற்காக தனியான வைத்தியசாலையை உருவாக்குவது அல்லது நாட்டில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளில் தனியான விடுதிகள் மற்றும் வசதிகளை ஏற்படுத்துவது டொலர்களைக் கண்டுபிடிக்க வழி வகுக்கும்.

மேலும், இலங்கை மாணவர்கள் மருத்துவம் மற்றும் ஏனைய கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு களுக்கு செல்வதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் நாட்டில் டொலர்களை மிச்சப்படுத்த முடியும் எனவும், இதற்கான வசதிகளை ஏற்படுத்துவதே இதற்கு தீர்வாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தவிர, வெளிநாட்டு மாணவர்களுக்காக இலங்கையில் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது உள்ளூர் பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களுக்கென தனியான துறைகளை நிறுவுவதன் மூலமோ பெரும் தொகை டொலர்களைச் சம்பாதிக்க முடியும் எனவும் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இதனைக் கருத்திற்கொண்டு இந்த நாட்டில் தேவையான சில மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்ய தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன் மூலம் டொலர்களை சேமிப்பதற்கான மற்றொரு சிறந்த வழியாக அமையும் என்றும் அவர் யோசனை முன்வைத்துள்ளார்.

# தமிழர் பகுதியான வடக்குக்கு டொலர்களை தேடிச் சென்ற ரவி



நாட்டுக்கு டொலர்களை தேடும் திட்டத்துக்காக தான் ஹெலி மூலம் வடக்கிற்கு சென்றேன் என முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் 4 ஆயிரம் பேருக்கு சதொச வவுச்சர் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ரவி கருணாநாயக் கவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள் விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஹெலியில் ஏன் வடக்கிற்கு சென்றீர்கள் என்று ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு, 'நான் ஏன் போக முடியாது? நான் அரசாங்கத்தில் இல்லை. அதனால் நான் என்ன வேண்டுமா னாலும்செய்யலாம்'என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான் முதலீட்டாளர்களுடன் சென்று டொலர்களை சேகரிக்க முயற்சிக்கும்போது, அதனையும் தவறாக பார்க்கின்றார்கள். ஊடகங்களும் இதனை அறிந்து கொள்ள வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தில் பதவி ஏற்பீர்களா என ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்ட கேள்விக்கு பதிலளித்த ரவி கருணாநாயக்க, தேவை பதவிகள் அல்ல மக்களுக்கு உதவுவதே என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் முன்னாள் அமைச்சரான ரவி கருணாநாயக்க கலந்து கொண்டார். இதற்காக கொழும்பில் இருந்து ஹெலி மூலம் மன்னார் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடவத்தை அரச வங்கியில் 6 கோடி ரூபா நிதி மோசடி!

## பணியாளர் ஒருவர் கைது



அரசாங்க வங்கியொன்றில் 6 கோடி ரூபா நிதி மோசடி செய்த வங்கிப் பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகளினால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடவத்தை பிரதேசத்தில் இயங்கி வரும் அரச வங்கியொன்றில் இவ்வாறு மோசடி செய்யப்பட் டுள்ளது.

போலி ஆவணங்கள் சமர்ப்பித்து சுமார் 48 வங்கி கடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உயிரிழந்துள்ளார். அவருக்கு உதவிய வங்கி உதவியாளரையே குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# வடக்கு மாகாண முன்னாள் அமைச்சரின் வாகனம் விபத்து



(மன்னார் நிருபர்)

வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஜீ.குண சீலன் பயணித்த மகிழுந்து மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. அதில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இந்த விபத்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை இடம்பெற்றுள்ளது. மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ஜீ. குணசீலன் தலைமையில் இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது.

குறித்த மருத்துவ முகாம் நிறைவடைந்த நிலையில் நானாட்டானில் இருந்து பயணிக்கும் போதே விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்தின்போது வாகனத்தின் முன் பகுதி முற்றாக சேதம் அடைந்துள்ளது.எனினும் வாகனத்தில் பயணித்த எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

முருங்கன் போலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.08.222இல் வெளியிடப்பெற்றது.